[1974 ஏப்ரல் 2

Paralayar Hydro Electric Scheme

* 716 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the investigation on the feasibility of the Paralayar Hydro Electric Scheme in Kanyakumari district has been completed; and

(b) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) ஆம். இது குறித்து நிறைவேற்றிய விரிவான ஆய்வுகளின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் "பரலையாறு புனல் மின் திட்டம்" குறித்து விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு மின் வாரியம் தயாரித்து அதற்கு அனுமதி பெறுவதற்காக அதை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தது. இத்திட்டம் தற்போது மத்திய நீர்—மின்விசை ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது. திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் நிறைவேற்று வதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டத்திற்குச் செலவிட வேண்டிய தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது 30 மெகா வாட் சக்தி கொண்டது. 4½ கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் வரை செல வாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று திட்டம் தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது.

சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் மின் உற்பத்தி

* 717 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த்தேக்கம் மூன்றுவது கட்டத்தை உயர்த்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1974 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) சாத்தனூர் அணையின் உயரத்தை உயர்த்துவது தொடர்பான தொடக்க அறிக்கை ஒன்று, (பாசனத்) தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இந்த நீர்த்தேக்கத்திலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ந. நாச்சியப்பன் : தற்சமயம் ஏதும் இல்லையென்றாலும் அணை உயர்த்தப்பட்ட பிறகாவது அரசு யோசித்து இது பற்றி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த அணையை உயர்த்திக் கட்டினால் அதிக ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடும் என்ற முறையில் பொதுப்பணித் துறையால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறு இருக்குமானால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது தனிப்பட்டவர்கள் ஜெனரேட்டர்கள் வைத்து மின்சாரம் உற்பத்தி செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது சாத்தனூர் வருகிற நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதோடு கூட அதை இன்னும் உயரமாகக் கட்டி குறைந்த பட்ச மின்சாரம் கிடைப்பதாக இருந்தாலும் அதை உற்பத்தி செய்தால், அந்த மாவட்ட மின்சாரத் துறையின் தேவையாவது பூர்த்தி செய்யும். இதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலித்து திட்டம் தயாரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது மிக சிறிய திட்டமாகத்தான் கருதப்படும். 30 மெகா வாட், 40 மெகா வாட் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இங்கு 10 அல்லது 15 மெகாவாட் தான் அப்படி அணையை உயர்த்தி கட்டினாலும் கிடைக்கக்கூடும். பாசனத்திற்கு அதிக நீர் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் பொதுப்பணித் துறை மூலமாக இந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரை ஃபீசிபிலிடி திட்டங்கள் எல்லாம் முடிந்தவுடன் இதையும் பரிசீலிக்கலாம்.

திரு. எஸ். முருகையன் : சாத்தனூர் அணையைக் கட்டிய பிறகு ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் நிரம்பி வழிந்து ஏராளமாகக் கடலில் போய்க் கலக்கிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மற்றத் திட்டங்களோடு இதுவும் ஒரு முக்கியமான திட்டம் என்று ஆய்வில் தெரியுமானால் விரைவில் ஏற்பாடு செய்யலாம்.

Rationing of Petrol

* 718 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government is working out a scheme of petrol rationing for introduction in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : பெட்ரோல் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்தமாதிரி விலையை ஏற்றி இருக்கிறார்கள். சாதாரணமாக இது மத்திய தர வர்க்கத்தினரைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், மற்ற நாடுகளைப்போல் சனிக் கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் எந்தவிதமான கார்களும் ஓடக்கூடாது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். யோசனை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். கே. பழனிசாமி : ஆகவே, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் கார்களை ஓட்டக்கூடாது என்ற முறையில் மத்திய சர்க்கார் ஆலோசனை சொல்லிற்று? பெட்ரோல் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெட்ரோலியப் பொருள்களின் விலை உலக மார்க்கெட்டில் உயர்ந்து கொண்டே போகிறது. இதை உணர்ந்து பெட்ரோல் பயன்படுத்துகிற